

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று திருவண்ணாமலை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அழகானந்தல் ஊராட்சியில் நடைபெற்ற கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ், சி.என். அண்ணாதுரை எம்.பி. மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ- தலைமையில் - வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில்

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம்!

## அமைச்சர் சா.மு.நாசர் சிறப்புரை! கலாநிதி வீராசாமி எம்.பி. உள்ளிட்ட ஏராளமானோர் உறுதிமொழிஏற்றனர்!

திருவள்ளூர், அக்.11

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாட்டை தலை குனிய விடமாட்டேன் ஓரணியில் தமிழ்நாடு தீர்மானம் ஏற்பு கூட்டம் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே நடைபெற்றது. மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்எல்ஏ தலைமை தாங்கினார். தலைமை செயற்குழு உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் எம்எல்ஏ முன்னிலை வகித்தார். திருவள்ளூர் நகர செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன் நகர மன்ற தலைவர் பா. உதயமலர் பாண்டியன் ஆகியோர் வரவேற்றனர்.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர், திமுக அயலக அணி தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்பி மற்றும் இலக்கிய அணி இணை செயலாளர் ஈரோடு இறைவன், தலைமை கழக பேச்சாளர் கொரஞ்சூர் எஸ்.முனுசாமி முரசொலி மூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

அமைச்சர் சா.மு.நாசா பேசும்போது,

இந்திய இறையாண்மைக்கு கட்டுப்பட்டு நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக நமது முதல்வர் சிறப்பாக ஆட்சி நடத்திக் கொண்டு வருகிறார். மேற்கு வங்கத்தில் பிறந்த உலக பொருளாதார வல்லுநர் ஒருவர் உலகம் முழுவதும் ஆய்வு செய்துள்ளார். அதேபோல் இந்தியாவையும் இந்தியாவில் உள்ள நமது தமிழ்நாட்டையும் ஆய்வு செய்துள்ளார்.

ஆயிரத்து பிறகு, தமிழ்நாடு என்ற ஒரு நாடு தனித்தமிழ் நாடாக இருந்திருந்தால் உலகத்தில் 18வது வல்லரசு நாடாக இருந்திருக்கும் என அவர் கூறியிருப்பதாக தெரிவித்தார். ஒன்றிய அரசால் தமிழ்நாடு வஞ்சிக்கப்பட்டு இருந்தாலும் தமிழக முதல்வரின் ஆற்றல் மிகு செயல்பாட்டால் பொருளாதார வளர்ச்சி 11.12 சதவிகிதம் உயர்ந்திருக்கிறது.

முதலமைச்சரின் திட்டங்களால் இந்த வளர்ச்சியை நாம் அடைந்திருக்கிறோம். இதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய அரசால் 50 லட்சம் மாணவ மாணவிகளுக்கும் 2 லட்சத்து 20 ஆயிரம் ஆசிரியர் பெருமக்களுக்கும் அலுவலக உதவியாளர்களாக இருக்கக் கூடிய 32 ஆயிரம் பேருக்கும் ரூ.2152 கோடி தர வேண்டியதை தர மறுத்தது.

மும்மொழி திட்டத்தை ஏற்றுக் கொண்டால் மட்டுமே இந்த பணத்தை விடுவிவதாக ஒன்றிய அரசு எச்சரித்தது. இது போன்ற வரலாற்றுப் பிழையை நான் ஒருபோதும் செய்ய மாட்டேன். பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் மும்மொழி திட்டத்திற்கு கையெழுத்து போட மாட்டேன் என பிடிவாதமாக இருந்து தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் போராடினார்.

கடந்த மூன்று நாட்களுக்கு முன்பு அந்த ரூ. 2152 கோடி தொகை விடுவிக்கப்பட்டு தமிழக அரசுக்கு கிடைத்தது. தமிழக முதல்வர் அனைத்து தரப்பு மக்களும் பெறுகின்ற வகையில் பல்வேறு நலத்திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார். நிகழ்ச்சி முடிவில்

இந்நிகழ்ச்சி முடிவில் 1.நான், தமிழ்நாட்டின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் விகிதத்தைக் குறைக்கும் நியாயமற்ற தொகுதி மறுவரையறைக்கு எதிராகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

2.நான், வாக்காளர் பட்டியல் மோசடி மூலம் தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் SIRக்கு எதிராக நிற்பேன். தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

3.நான், நீட் மற்றும் இளைஞர்களை முடக்கும் எந்தவொரு திட்டத்தையும் எதிர்த்து நிற்பேன், நம் மாணவர்களுக்கு உரிய நிதிக்காகப் போராடுவேன். ஒருபோதும் தமிழ்நாட்டைத் தலைகுனிய விடமாட்டேன்

4.நான், தமிழ் மொழி, பண்பாடு மற்றும் பெருமைக்கு எதிரான எந்தவொரு பாகுபாட்டையும் எதிர்த்துப் போராடுவேன். எதற்காகவும் தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன்

5.நான், பெண்கள், விவசாயிகள், மீனவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள் என ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்கத் தேவையான நிதிக்காகப் போராடுவேன். தமிழ்நாட்டைத் தலை குனிய விடமாட்டேன் என கழக நிர்வாகிகள் மற்றும் மகளிர் அனைவரும் உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர் பெ.சேகர், ச.சண்முகநாதன், மாநில நிர்வாகிகள் ஆர்.டி. இ. ஆதிசேஷன், ஓ.ஏ. நாகலிங்கம் , இ.குருதாஸ், மாவட்ட நிர்வாகிகள் கே.திராவிட பக்தன், டாக்டர் வி.சி.ஆர்.குமரன், சி. ஜெயபாரதி, எம். மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ்.கே.ஆதாம், வி . கி ஷோ ர் , மு.சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ரவீந்திரநாத்,

ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் கூளூர் எம்.ராஜேந்திரன், எஸ்.மகாலிங்கம், மோ.ரமேஷ், கே . அ ரி கி ரு ஷ் ண ன் , தா.கிறிஸ்டி அன்பரசு,



சென்னை மாநகராட்சி கடற்கரைப் பகுதிகளில் பணியாற்றும் 400 தூய்மைப் பணியாளர்களின் பணியை சிறப்பிக்கும் நிகழ்ச்சியில் மேயர் திருமதி ஆர்.பிரியா , பங்கேற்று அவர்களின் பணியினைப் பாராட்டி, நலத்திட்ட உதவி தொகுப்புகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், டாக்டர் கோ. சாந்தகுமாரி மற்றும் அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



எழும்பூர் தொகுதி, வார்டு எண்.99, புரசைவாக்கம் காவலர் குடியிருப்பில் அடிக்கடி கழிவு நீர்க் குழாய் அடைப்பு ஏற்படுவதாக நாளிதழ் ஒன்றில் வந்த செய்தியையடுத்து, வழக்கறிஞர் இ.பரந்தாமன் எம். எல்.ஏ. பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகரக் குடிநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் வாரிய அதிகாரிகளோடு அக்குடியிருப்பில் ஆய்வு செய்து, உரிய நடவடிக்கைகள் மேற்கொண்டதைத் தொடர்ந்து கழிவு நீர்க் குழாய் அடைப்பு பிரச்சினை தீர்க்கப்பட்டது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கோ.சு. மணி
### அக்டோபர் 12 (1962)



சென்னை 57வது வட்டக் கழகச் செயலாளராகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக பணியாற்றியவர்

மும்முனைப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார்.

விலைவாசி போராட்டத்தில் பங்கேற்று சிறையில் இருந்தபோது சிறைக் கைதிகளால் தாக்கப்பட்டு மரணமடைந்தார்.

தலைவர் கலைஞர் அவர்களால் 'கொள்கைக் குன்று' எனப் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.




# தி.மு.க. இளைஞர் அணி

## புதிய நிர்வாகிகளுக்கான 2026 தேர்தல் பணி பயிற்சிப் பாசறைக் கூட்டம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், 2026 சட்டமன்றத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. மண்டலம்–1 க்கு உட்பட்ட ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதியில் உள்ள பகுதிகளில் பயிற்சிப் பாசறைக் கூட்டம் கீழ்க்காணும் தேதியில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | பகுதி | இடம் |
|---|---|---|---|
| 12.10.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 9.00 மணி | ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதி | கலைஞர் அரங்கம், அண்ணா அறிவாலயம், தேனாம்பேட்டை. |
| | மாலை 4.00 மணி | ஆயிரம் விளக்கு மேற்குப் பகுதி | மீனாட்சி நாராயணன் திருமண மண்டபம், ராகவன் தெரு, அண்ணா நெடும்பாதை, சூளைமேடு. |

அன்பகம்
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 10.10.2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. – டாக்டர் ஜெ.அருண் சிறப்புரை!

# சோழவரம் தெற்கு ஒன்றிய பாக முகவர்கள் - ஒருங்கிணைப்பாளர்கள் கூட்டம்!

## ஒன்றியச் செயலாளர் மீ.வே. கர்ணாகரன் ஏற்பாட்டில்!

சோழவரம், அக்.12-

சென்னை வடகிழக்கு மாவட்டம் சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார் பாக கழக தலைவரும் தமிழக முதல்வருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மண்டலப் பொறுப்பாளர் ஆ.இராசா எம்.பி. ஆலோசணைப்படி சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் பாக ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் BLA2, BLC, BDA, BYA ஆகியோர்களுக்கான அவரச ஆலோசனைக் கூட்டம் பாடியநல்லூர் ஆலய மஹா மண்டபத்தில் ஒன்றிய நிர்வாகி ஏ.காசீம் முஹம்மது தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளரும், மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு BLA2, BLC, BDA, BYA ஆகியோர்களுக்கு ஆலோசனை வழங்கினார். மாதவரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் ஜெ.அருண் சிறப்புரையாற்றி னார்.

இதில் ஒன்றிய நிர்வாகிகள், கே.எம். துரைவேல், ப.சீனிவாசன். கே.வீரம்மாள், செ.அரசு, இரா. விஜயன், பா.சேகர், பொண் கோதண்டன் மற்றும் மாவட்ட, ஒன்றிய அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் சன். முனியாண்டி, நா.பரசுராமன், அ.ச.அமான், மு.கீதாரா மன், வி.ஞானம், ஏ.பி.சந்திரன், ஜி.பூபாலன், ஜி.சுப்பிரமணி, இரா.கிருஷ்ணமூர்த்தி, ப.சு.க .இளங்கோவன், பி.கருணாநிதி, கு.கலைவாணன், எம். ஜி.கார்த்திக், எம்.சந்திரமௌலி, எஸ். சரஸ்வதி, ஜெ.சிவகாமி, சீனிவாசன், ஏ.கே.செல்வகுமார், ஆர். துளசி, டி.பத்மநாபன், அ. து.மணி, எம்.முகமது அலி, எம்.இரத்தினமாலா, எம். ரமேஷ், ஆர்.ராதிகா, சி.ஜெ. ராஜசேகர்ராவ், ஜி.வேதா, ஜெ.வேலாயுதம், சி.ஜெகன், எஸ்.எம்.கே.ஜாகீர் உசேன், ஜீவா, ஜோசப்பாரி மற்றும் கிளை செயலாளர்கள். BLA 2, BLC, BDA, BYA நிர்வாகிகள் ஜி.ரவீந்தரா, சி.ஜே.சீனிவாசன், ஆர்த்திரவி, சி.என்.சண்முகம், பெ.பழனி, என். கே.கிருஷ்ணன், வி.வினோத்குமார், டி.ஆர்.கே.பாபு, பி. டி.சந்திரன், சி.ஜே.செந்தில்குமார், கே.ராஜேந்திரன், பா.சம்பத், மா.இரகு, ஏ.எல். விஜயகுமார், ஆர்.ஜெயசீலன் உள்பட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அணிகளின் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் முன்னாள் நிர்வாகிகள் உள்பட கழக கழகத்தினர்கள் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்

திரளாக கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியை சோழவரம் ஒன்றிய செயலாளர் மீ.வே.கர்ணாகரன் சிறப்பாக ஏற்பாடு செய்தார்.


# மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்க நிர்வாகிகள் தேர்தல்

(பதிவு எண். 605/MDS, பேரவை இணைப்பு எண். 287)

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கத்தின் (பதிவு எண் **605/MDS**, பேரவை இணைப்பு எண். **287**) நிர்வாகிகள் தேர்தல் அறிவிக்கப்பட்டு பணிமனைகள்தோறும் வேட்புமனுக் கள் பெறப்பட்டு தேர்தல் ஒத்தி வைக்கப்பட்ட நிலையில் தொடர் நடவடிக்கையாக பணிமனை களின் தேர்தல் நடத்துவதற்கு வழக்கறிஞர் **திரு. அ.சரவணன்** (தணிக்கைக் குழு உறுப்பினர்) தலைமை மேலிடப் பிரதிநிதியாகவும் **திரு. கோ.சி.வள்ளுவன்** (பேரவைப் பொருளாளர்), தலைமை தேர்தல் ஆணையாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள். அதன்படி கீழ்க்கண்ட அட்டவணையின்படி பணிமனை நிர்வாகிகள் தேர்தல் பணிமனைகள்தோறும் நடைபெறும்.

**பணிமனை நிர்வாகிகள் தேர்தல்:**

**தேர்தல் கால அட்டவணை**

| | |
|---|---|
| வேட்பு மனு பரிசீலனை | – 23.10.2025 காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை |
| தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | – 24.10.2025 காலை 11.00 மணி |
| வேட்பு மனு திரும்பப் பெறுதல் | – 25.10.2025 காலை 10.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை |
| இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் | – 25.10.2025 மாலை 5.30 மணி |
| போட்டியிருப்பின் வாக்குப் பதிவு | – 28.10.2025 காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை |

பணிமனை நிர்வாகிகள் தேர்தலுக்கான வேட்புமனு பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப் பதிவு ஆகிய தேர்தல் நடைமுறைகள் அந்தந்த பணிமனைகளில் நடைபெறும். வாக்குப் பதிவு முடிந்தவுடன் வாக்குகள் எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்படும்.

**மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல்:**

**தேர்தல் கால அட்டவணை**

| | |
|---|---|
| வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் (பணிமனைச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர்கள்) | – 30.10.2025 காலை 10.00 மணி |
| வேட்பு மனு படிவம் வழங்குதல் | – 30.10.2025 காலை 10.30 மணி முதல் மதியம் 12.00 மணி வரை |
| வேட்பு மனு தாக்கல் | – 30.10.2025 மதியம் 12.00 மணி முதல் மதியம் 2.00 மணி வரை |
| வேட்பு மனு பரிசீலனை | – 30.10.2025 மதியம் 2.00 மணி முதல் மாலை 3.30 மணி வரை |
| தகுதியான வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல் | – 30.10.2025 மாலை 4.00 மணி |
| வேட்பு மனு திரும்பப் பெறுதல் | – 30.10.2025 மாலை 4.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை |
| இறுதி வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடுதல் | – 30.10.2025 மாலை 6.00 மணி |
| வாக்குப் பதிவு | – 01.11.2025 காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை |

மத்திய சங்கத் தேர்தல் வாக்காளர் பட்டியல் வெளியிடுதல், வேட்புமனு படிவம் வழங்குதல், வேட்பு மனு தாக்கல், பரிசீலனை, இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடுதல், வாக்குப் பதிவு, வாக்கு எண்ணிக்கை, முடிவு அறிவித்தல் ஆகியவை மத்திய சங்க அலுவலகத்தில் நடைபெறும்.

ஆணையாளரின் முடிவே இறுதியானது.

11.10.2025
இடம் : கலைஞரகம்

**மு.சண்முகம்**, Ex.MP
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை